Munster Gesangebuch, 1677

Fairest Lord Jesus
568.558



பாமாலை 260 - உன்னதமான மா இராஜாவான

1. உன்னதமான
மா இராஜாவான
சீர் சிறந்த இயேசுவே;
உம்மில் களித்து
உம்மைத் துதித்து
நேசித்துக்கொண்டிருப்பேனே.

2. பூ மலர் காடும்
பயிர் ஓங்கும் நாடும்
அந்தமும் சிறப்புமாம்;
இயேசுவின் அந்தம்
எனக்கானந்தம்
என் மனதின் குளிர்ச்சியாம்

3. அண்டங்கள் யாவும்
சூரியன் நிலாவும்
அந்தமாய் பிரகாசிக்கும்;
அவர் முன்பாக
மா ஜோதியாக
மினுங்கும் யாவும் மங்கிப்போம்.

4. விண் மண்ணுடைய
மகிமை மறைய
அவர் அந்தமானவர்;
வானத்திலேயும்
பூமியிலேயும்
நான் நாடினோர் என் ரட்சகர்.